# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அரையாண்டு -மதிப்பீட்டுத் தாள்

## 2020 - 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

TEDC

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:............................................................

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 216 ☐ ஆ) 217 ☐

இ) 247 ☐ ஈ) 30 ☐

2. நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட பகுதி

அ) குடா ☐ ஆ) தீவு ☐

இ) கழிமுகம் ☐ ஈ) களப்பு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. “யாதும் ஊரே யாவரும் கேளிர்..” இதில் கேளிர் என்பது

அ) உறவினர் ☐ ஆ) நண்பர் ☐

இ) முதியவர் ☐ ஈ) பெரியவர் ☐

4. பண்டாரவன்னியன் ____________ எதிர்த்துப் போரிட்டான்.

அ) ஆங்கிலேயரை ☐ ஆ) போர்த்துக்கேயரை ☐

இ) ஒல்லாந்தரை ☐ ஈ) பாண்டியரை ☐

5. செருக்கோடு மலரும் பூ என மகாகவி உருத்திரமூர்த்தி கூறுவது

அ) முல்லையை ☐ ஆ) காட்டுமல்லிகையை ☐

இ) செவ்வந்தியை ☐ ஈ) செவ்வரத்தையை ☐

TEDC

6. இடைச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு:

அ) அவன் ☐ ஆ) வேந்தன் ☐

இ) தோறும் ☐ ஈ) கடம் ☐

7. ‘கு’எனும் உருபு

அ) 1ஆம் வேற்றுமை ☐ ஆ) 3ஆம் வேற்றுமை ☐

இ) 4ஆம் வேற்றுமை ☐ ஈ ) 5ஆம் வேற்றும ☐

8. மரத்திலிருந்து பழம் விழுந்தது. இச் சொல்லியம் உணர்த்தும் பொருள்

அ) நீங்கற்பொருள் ☐ ஆ) ஒப்புப்பொருள் ☐

இ) எல்லைப்பொருள் ☐ ஈ ) ஏதுப்பொருள் ☐

9. அறுபதாம் ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ☐ ஆ) வெள்ளிவிழா ☐

இ) வைரவிழா ☐ ஈ ) பவளவிழா ☐

10 கார்காலம் என்பது

அ) கோடைகாலம் ☐ ஆ) பனிகாலம் ☐

இ) மழைகாலம் ☐ ஈ ) இலைதுளிர்காலம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

11. தான் வாழக் கருதாமல் தமிழ்த்தாய் வாழ நெல்லிக்கனியைக் கொடுத்த மன்னன்

அ) காரி ☐ ஆ) ஓரி ☐

இ) பாரி ☐ ஈ ) அதியர்மான் ☐

12. ப்,வ் என்பன

அ) பகுதி ☐ ஆ) விகுதி ☐

இ) இடைநிலைகள் ☐ ஈ ) சந்தி ☐

13. காளமேகப்புலவரின் இயற்பெயர்

அ) மயில்வாகனம் ☐ ஆ) சுப்புரத்தினம் ☐

இ) வரதன் ☐ ஈ) சுப்பிரமணியம் ☐

14. ஒன்றன்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஓடின ☐ ஆ) ஓடினர் ☐

இ) ஓடியது ☐ ஈ) ஓடுகின்றான் ☐

15. முத்தமிழின் ஒரு பிரிவாக விளங்குவது

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

அ) நடனம் ☐ ஆ) ஓவியம் ☐

இ) சிற்பம் ☐ ஈ) நாடகம் ☐

16. இந்த உலகம் கொரோனாவால் துன்புறுகின்றது. இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) 2 ஆம் வேற்றுமை ☐ ஆ) 3 ஆம் வேற்றுமை ☐

இ) 4 ஆம் வேற்றுமை ☐ ஈ) 5 ஆம் வேற்றுமை ☐

17. பைந்தமிழ் என்பதைப் பிரித்து எழுதினால்

அ) பசுமை + தமிழ் ☐ ஆ) பைந் + தமிழ் ☐

இ) பசுமைய் + தமிழ் ☐ ஈ) பைந்த் + தமிழ் ☐

TEDC

18. ‘‘ஒல்காப் பெரும்புகழ்’’ எனப் புகழப்பட்ட நூல்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) மூதுரை ☐

இ) தொல்காப்பியம் ☐ ஈ) குடும்பவிளக்கு ☐

19. காட்டுமல்லிகை என்ற பாடலைப் பாடியவர்

அ) உருத்திரமூர்த்தி ☐ ஆ) காளமேகப்புலவர் ☐

இ) கண்ணதாசன் ☐ ஈ ) பாவேந்தர் ☐

20. நாங்கள் விடுமுறைக்குத் தாயகம் செல்வோம் என்று அப்பா கூறினார். இச் சொல்லியம்

அ) கலப்புச் சொல்லியம் ☐ ஆ) தனிச் சொல்லியம் ☐

இ) கூட்டுச் சொல்லியம் ☐ ஈ ) வினாச் சொல்லியம் ☐

21. பாடினான் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) பாடு ☐ ஆ) இன் ☐

இ) பாடி ☐ ஈ ) ஆன் ☐

22. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை பிறந்த ஊர்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

அ) வயாவிளான் ☐ ஆ) நல்லூர் ☐

இ) கொக்குவில் ☐ ஈ ) உடுவில் ☐

23. ஔவையாரது நூல்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. இச் சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ) ஆல் ☐ ஆ) இன் ☐

இ) அது ☐ ஈ ) இல் ☐

24. கோட்டான் என்ற சொல் குறிப்பது

அ) ஆந்தையை ☐ ஆ) புறாவை ☐

இ) மயிலை ☐ ஈ ) கிளியை ☐

25. இலை காய்ந்துவிட்ட நிலையைக் குறிக்கும் பருவம்

அ) தளிர் ☐ ஆ) கொழுந்து ☐

இ) சருகு ☐ ஈ) பழுப்பு ☐

26. ஆங்கிலேயப் படைகள் மீது குலசேகர முதலியாரின் படையணி தாக்குதல் தொடுத்த இடம்

அ) முல்லைத்தீவு ☐ ஆ) மூதூர் ☐

இ) மன்னார் ☐ ஈ) மட்டக்களப்பு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

27. வன்னி மன்னனால் ஆங்கிலேயரின் பீரங்கிகள் ________.

அ) கைப்பற்றப்பட்டன ☐ ஆ) கைப்பற்றினான் ☐

இ) கைப்பற்றப்பட்டனர் ☐ ஈ) கைப்பற்றியது ☐

28. இன்று எமக்குக் கிடைத்துள்ள நூல்கள்

அ) இடைக்கழகநூல்கள் ☐ ஆ) முதற்கழக நூல்கள் ☐

இ) கடைக்கழகநூல்கள் ☐ ஈ) முக்கழகநூல்கள் ☐

29. கிறித்தவ நெறி இலக்கியம்

அ) தேம்பாவணி ☐ ஆ) சீறாப்புராணம் ☐

இ) திருவாசகம் ☐ ஈ) தேவாரம் ☐

TEDC

30. பின்வருவனவற்றுள் மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்து

அ) ஆ ☐ ஆ) ஓ ☐

இ) பா ☐ ஈ) யா ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**திலீபன் 27.11.1963 ஆம் ஆண்டு ஊரெழு என்னும் ஊரில் பிறந்தார். இவரது இயற்பெயர் பார்த்திபன். இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் கல்வி கற்று வந்தார். இக்காலத்தில் விடுதலைப் போரில் தம்மை இணைத்துக் கொண்டார். இவர் தமிழ்மொழிமீதும் தமிழ் இனத்தின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவராக இருந்தார். 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது. அது தமிழ் மக்களைக் கொன்று குவித்தது. இதனைக் கண்டு திலீபன் மனம் குமுறினார். மக்களைக் காப்பாற்றுவதற்காக, இந்திய அமைதிப்படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணா நோன்பைத் தொடங்கினார். இவர் தண்ணீர் அருந்தாமலும் உணவு உண்ணாமலும் பன்னிரண்டு நாட்கள் உண்ணாநோன்பிருந்தார். இறுதியில் திலீபனது கோரிக்கைகள் எவையும் நிறைவேறாத நிலையில் அவர் உயிர்துறந்தார்.**

1. திலீபனின் இயற்பெயர் என்ன?

_______________________________________________

2. திலீபன் யாரைக் காப்பாற்றுவதற்காக உண்ணா நோன்பிருந்தார்?

_______________________________________________

3. இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த ஆண்டு எது?

_______________________________________________

4. திலீபன் எத்தனை நாட்கள் உண்ணா நோன்பிருந்தார்?

_______________________________________________

5. திலீபன் எவற்றின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ‘‘சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா’’ இப்பாடலைப் பாடியவர் யார்?

2. அதியர்மான் ஆட்சிபுரிந்த ஊர் எது?

3. ‘‘உன்னைப்போல் எனக்கும் வாழ்வில் உலகத்தார் உயர்வு காணார்...’’ இக் கூற்று யாரால் எதைப் பார்த்துக் கூறப்பட்டது?

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. வரலாற்றுப்புகழ் பூத்த இரு வன்னி மன்னர்களின் பெயர்களைத் தருக.

5. சீர்த்தலைச்சாத்தனார் எழுதிய நூல் எது?

6. தமிழில் எத்தனை வகையான சிற்றிலக்கியங்கள் உள்ளன?

TEDC

7. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களின் பெயர்களுள் இரண்டைத் தருக.

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# திருக்குறள்

| | | |
|---|---|---|
| வழியை | காட்டும் | நடந்திடுவோம் |
| பொருள் | அடியில் | |

அன்னைத் தமிழில் திருக்குறளை
ஆக்கித் தந்த பெருமபுலவர்
அறம் ________________ இன்பம் மூன்றினையும்
அழகாய்ச் சொன்ன பெரும்புலவர்

இரண்டு ________________ குறள் பாக்கள்
இனிதாய் எழுதிய தமிழ்ப் புலவர்
வாழும் ________________ அழகாக
வகுத்துத் தந்த பெரும்புலவர்

வள்ளுவர் ________________ வழிதனிலே
வாழும் நெறியை வகுத்திடுவோம்
நாளும் குறள்வழி ________________
நலமே வாழ முயன்றிடுவோம்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

தனிச்சொல்லியம் ______________________

கூட்டுச்சொல்லியம் ______________________

2. பின்வரும் வினையடிகளை பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

| | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|
| நீந்து | ________ | ________ | ________ |
| பார் | ________ | ________ | ________ |

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. பின்வரும் வினைமுற்றுகளின் இடைநிலைகளை எழுதுக.

வருவார் ______________

தேடினான் ______________

போகின்றனர் ______________

4. தரப்பட்டுள்ள சொல்லியங்களிலுள்ள தோன்றாச் செயப்படுபொருளைக் கண்டறிந்து எழுதுக.

1. ஆசிரியர் அழகாக வரைந்தார். ______________
2. புலவர் இனிய குரலில் இசையோடு பாடிக் காட்டினார்.

______________

3. இடையன் அரசசபைக்குள் நுழைந்ததும் வணங்கினான்.

______________

TEDC

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

இரட்டைக்கிளவி ______________

அடுக்குத்தொடர் ______________

படர்க்கை ______________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

எமது பெற்றோர் எம்மை மிகுந்த அக்கறையோடு வளர்க்கின்றனர். எமக்கு நல்லபழக்கவழக்கங்களைச் சொல்லித் தருகின்றனர். எமக்குச் சிறு துன்பம் ஏற்பட்டாலும் அதைப் பெரிதாக எண்ணிக் கவலைப்படுகின்றனர். எம் எதிர்கால வாழ்வின் உயர்வுக்குப் பெற்றோர்கள் வழிகாட்டுகின்றனர். எமது விருப்பங்களையும் நிறைவேற்றுகின்றனர். நாம் எம் பெற்றோரைப் போற்றி வாழ்வோம்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புள்ளிகள் 05

TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ பண்டாரவன்னியன்.
- ✸ தழிழுக்குத் தந்த கனி
- ✸ தமிழ்ப்பள்ளி

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC